படுத்துவதற்கும், 100 ஏக்கர் நிலத்தில் வடிகால் போத்திகளை அமைப்பதற்காக ரூ. 54,000-மும் செலவு மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இந்திய அரசிடமிருந்து 15 சதவீத மான்யமும் 60 சதவீதக் கடன் உதவியுடன் கிடைக்கும். இத்திட்டத்தின் மூலமாகப் பயனடைவோருக்கும் மாநில அரசு 10 சதவீத உதவித்தொகை வழங்குகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிக்காகும் செலவு பயன்துய்ப்போரிடமிருந்து மூன்றாவது ஆண்டு தொடங்கி 10 சமமான ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படும். பயனடைவோரிடமிருந்து வசூலாகும் தொகை மத்திய மாநில அரசு வழங்கிய உதவித் தொகைபோக இத்திட்டத்திற்காகும் செலவையே குறிக்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாத்தனூர் ஆயக்கட்டு பகுதியில் ரூ. 14,20,000 மொத்தச் செலவில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும் :—

	முதலாண்டு ஏக்கரில்.	இரண்டாவது ஆண்டு ஏக்கரில்.	மூன்றாவது ஆண்டு ஏக்கரில்.	நான்காவது ஆண்டு ஏக்கரில்.	ஐந்தாவது ஆண்டு ஏக்கரில்.	மொத்தம்.
1 நிலத்தைச் சமப படுத்துதல்.	100	750	750	750	650	3,000
2 வடிகால்கள் ..	100	2,500	2,500	2,500	1,400	9,000
3 உவர் நிலையம், களர் நிலங்களைப் பண்படுத்தல்.	..	150	150	200	200	700

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. மெய்யப்பன், திரு. கருப்பையா ஆகியவர்கள் அவையில் இல்லாத காரணத்தினால் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) விதி 23(1)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளின் 23(1)-வது விதியைத் தளர்த்திவிட்டு இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக்கொள்ளவேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.